★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 5உ செவ்வாய் (20—11—56) ★ ★ வெளியீடு: கார்த்திகை 6உ புதன் (21—11—56) [இதழ் 139

போபாலில் ரூ. 32 கோடி செலவில் மின்சார இயந்திரத் தொழிற்சாலை

★

கனரக மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையை போபாலில் நிறுவுவதற்காக டில்லி சர்க்கார் ரூ. 32 கோடி அனுமதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தொழிற்சாலைக்கான கட்டிட வேலைகள் 1958-ல் துவங்கும் என்றும், இதற்கான பூர்வாங்க வேலைகள் துவங்கிவிட்டன என்றும் தெரியவருகிறது.

யாதும் ஊரே! யாவரும் கேளீர்!

வலிவுக்கும் நலிவுக்கும் காரணமான தமிழ்ப் பண்பாடு

அழகு தரும் வைரம்—உயிருக்கும் கேடுபயப்பதில்லையா?

சென்னைக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

"'யாதும் ஊரே. யாவரும் கேளிர்' என்ற பண்பாடு, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்தம் பண்பாடாயிருந்து வருகிறது.

"இந்தப் பரந்த தமிழ் பண்பாடுதான் நமது வலிவுக்கும் நலிவுக்கும், (கேடுக்கும்) காரணமாக இருக்கின்றது என்று கூறலாம்.

"நமது இந்தப் பண்பாடு, நமக்குப் பெருமையும் தந்து வருகிறது! அதேபோது, நமது வாழ்வுக்குச் சிறுமையும் தேடித் தருகிறது!

"வைரம், ஆரணங்கின் அழகுக்கும் காரணமாயிருக்கிறது—அதனை அவள் அணிந்திருக்கும்போது! அவள் மனமுடைந்தபோது, அதனைப் பொடியாக்கி உண்டுவிட்டால், உயிருக்கே கேடு சூழ்ந்து விடுகிறது!

"இந்த வைரம் போன்றதுதான் நமது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாடும்!

"நமது இந்தப் பரந்த பண்பாட்டினால், பலர் நம்மைச் சுலபத்தில் ஏமாற்றிவிட்டிருக்கிறார்கள்! இன்னும் ஏமாற்ற நினைக்கிறார்கள்"

—என்று அண்ணா அவர்கள், 18-11-56-ல், சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பொது வாழ்வுத் துறையில் தமிழகத்தின் தலைசிறந்த பண்பாளராயிருக்கிற திரு. பி. டி. இராசன் அவர்கள் இதுபோன்ற கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதின் மூலம், நமக்கு அடிக்கடி அறிவுரை வழங்கிவருவது நமக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

"மாற்றுக் கட்சியினர் பழி சொல்லுவதாக நினைத்துக் கொண்டு, 'இவர்கள் எல்லாம் நீதிக் கட்சியின் வழிவந்தவர்கள்' என்று பேசுகின்றனர். நான், இந்தக் கூற்றுக்குப் பொதுமேடைகளிலேயே பதிலளித்திருக்கிறேன்.

'வெட்கப்படவில்லை!'

"'நாங்கள் ஜஸ்டிஸ் கட்சி வழி வந்தவர்கள் என்று கூறிக்கொள்ளுவதற்கு வெட்கப்படவில்லை' என்று நான் முன்பே கூறியிருக்கிறேன்.

"பண்பு என்ற அழகிய சொல், எளிதில் பொருள் விளக்கிவிடக் கூடியது என்று பலருக்குத் தோன்றினும், அதன் ஆழ்ந்த சுவை மிக்க பொருள், சிலருக்கு மட்டுமே தெரியக்கூடியது. அந்தப் பொருளுக்கு இலக்கணமானவர்கள் பொது வாழ்வுத் துறையில் சிலர் மட்டுமே இருக்கிறார்கள்; அவர்களில் ஒருவர்தான் திரு பி. டி. இராசன் அவர்கள்.

"அவர்கள், தனக்கென உள்ள ஒரு கொள்கைவழி நடப்பவர்கள்; அதேபோது நமது கொள்கைவழி நாம் நடப்பதுகண்டு, நம்மை மதிப்பவர்கள்; அதனால்தான், திரு. பி. டி. இராசன் அவர்களை நாம், 'தமிழ் நாட்டின் பண்பாளர்,' என்று கூறுகிறோம்.

"கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு ஒருவரை முன்மொழிபவர், 'திருவாளர்...... அவர்களை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்,' என்று கூறுவார்; அது அவரது பண்பு! தலைமை தாங்குபவர், 'என்னைத் தலைமை தாங்குமாறு பணித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்' என்பார்; இது, அவரது பண்பு!

"படித்தவரை படிக்காத ஒருவர் அறிமுகம் செய்கையில், 'நானெல்லாம் படிக்காதவன்; இவர் நிரம்பப் படித்தவர்; கற்றறிந்த மேதை' என்று கூறுவார்; அது அவரது பண்பு! படித்தவர் படிக்காதவரை அறிமுகம் செய்யும் போது, 'நிரம்ப அனுபவம் பெற்றவர்; விஷய ஞானமுடையவர்; தேர்ந்த பண்பாளர்' என்று எடுத்துரைப்பார்; இது அவரது பண்பு!

'தலைதூக்கும் தலைகீழ்ப் பண்பாடு'

"ஆனால், இன்று தமிழ் நாட்டில் ஒரு தலைகீழ்ப் பண்பாடு தலைகாட்டி வருகிறது.

"பாமரர்களுக்கு, படித்தவர்கள் ஆதாரவர்களாக்கப்பட வேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள்.

"பாமரர்கள், என்றென்றைக்கும் பாமரர்களாகவே இருக்க வேண்டுமென்று படித்தவர்கள் கூறமாட்டார்கள்; பாமரர்கள்கூட அப்படி எந்த நாட்டிலும் கூறமாட்டார்கள். எல்லோரும் படித்தவர்களாக வேண்டும் என்றுதான் அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் அதற்கிடையில் உள்ள காலத்தில், ஒருவரை ஒருவர் உயர்த்திப் பேசாவிட்டாலும் தாழ்த்திப் பேசாமலிருந்தால் நலம்; அதுதான் பண்பாடும்கூட!

'சனநாயகப் பண்பு'

"போரில் ஈடுபட்டது பிரிட்டன்; ஈடன் சர்க்கார் மேற்கொண்ட அந்த நடவடிக்கையை தொழிற் கட்சித் தலைவர் எதிர்த்துப் பேசியது காரசாரமாக மட்டுமல்ல—கருத்தாழம் மிக்கதாகவும் இருந்தது. 'ஈடனின் நடவடிக்கை, உலக அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதுடன், பிரிட்டனின் புகழுக்கும் இழுக்குத் தேடுவதாக உள்ளது,' என்று எடுத்துரைத்தார் கெயிட்ஸ்கெல்! இந்த ஜனநாயகப் பண்பு அந்த நாட்டில் நிலவுகிறது!

'அதுபோன்ற ஜனநாயகம் இந்த நாட்டில் இல்லையே என்று தலைவர் அவர்கள் வருத்தப்பட்டார்கள்; ஆனால், அந்த நாடு அல்லவே இது!

"தனக்கு மக்கள் சபையில் பெருவாரியான உறுப்பினர் பலம் இருக்கிறது என்ற காரணத்தினாலேயே, எதிர்க் கட்சித் தலைவராயிருந்த கெயிட்ஸ்கல் பேசுவதை நாம் ஏன் கேட்கவேண்டும் என்று ஈடன் கேளாக் காதினராக, அலட்சியமாக இருக்கவில்லை. கெயிட்ஸ்கெல் பேசுவது அத்தனையையும் கூர்ந்து கேட்டார்—கவனமாகக் கேட்டார்.

"பதிலளிக்கையில் கூட 'கெயிட்ஸ்கெல் கும்பல் பிரிட்டனின் துரோகிகள்' என்று அவர் பேசவில்லை. இது, பிரிட்டிஷ் ஜனநாயகப் பண்பாடு!

"அந்தப் பண்பாடு இந்த நாட்டில் இல்லை என்றால், இந்த நாடு இங்கிலாந்து அல்லவே!

ஒரு நாளில் தோன்றிடுமா?'

"கட்சி அரசியல் நடைபெறும் நாடுகளில் நிச்சயம் எதிர்க் கட்சி வேண்டும்; ஆனால், கட்சி அரசியலை நடத்துவதற்குக் கட்சிகள் ஒரு நாளில் உருவாகிவிட முடியாது; எந்த ஒரு அரசியல் கட்சியும் ஒரு நாளில் தயாராகிவிட முடியாது.

'இங்கிலாந்து நாட்டில் மன்னரைச் சுற்றி நின்ற பிரபுக்கள் இரு பிரிவினராகப் பிரிந்து நின்றார்கள்; ஒரு கூட்டம், 'மன்னருக்கே சகல உரிமைகளும் வேண்டும்' என்றும், மறு கூட்டம், 'மக்களுக்கும் சில உரிமைகள் வேண்டும்' என்றும் பிரிந்து நின்றனர். இப்படித்தான், இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளுக்கு வித்திடப்பட்டது.

'ஜான் மன்னனை ஒரு அறையில் தள்ளி, மக்களுக்கான சில உரிமைகள் அடங்கிய சாசனத்தில் கையெழுத்து வாங்கி, அதனைப் பிரகடனப் படுத்தினார்கள், ஒரு காலக் கட்டத்தில்! அதுதான், 'மாக்னா கார்டா' என்ற சாசனமாகும்!

'பிரிட்டிஷாரின் துரோகம்'

"இப்படி மக்களுக்கு ஒரு பிரிவும், மன்னனுக்கு ஒரு பிரிவும், இந்த இரு பிரிவுகளும் ஒத்த மதிப்புடையனவாகவும் மக்கள் கூட்டம் பிரிந்து நின்றது. அந்த அடிப்படையில் அரசியல் தத்துவங்களும் உருவாக்கப்பட்டன; கட்சிகள் தோன்றத் தலைப்பட்டன; அது ஒரு பெரும் வரலாறு.

"ஆனால், இந்தியாவைவிட்டு வெளியேறிய காலத்தில் பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் செய்த பெரிய துரோகம் எல்லாம், தாங்கள் வைத்திருந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும்போது, காங்கிரசை மட்டும் அழைத்துக் கலந்துபேசியதுதான். தங்கள் நாட்டில் கொண்டுள்ள சனநாயகப் பண்பிலிருந்து அந்த நேரத்தில் பிரிட்டன் வழுவியது பெரும் தவறாகும்.

"அதனால்தான், காங்கிரஸ் இன்று, சாதாரணமாக சனநாயகப் பண்பை மறந்து, எதிர்க் கட்சிகள் என்றாலே துச்சமென மதிக்கும் போக்கில் சென்றுகொண்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்."

[நாளையும் வரும்]

'சுய சரிதை'யை நினைத்து வெட்கம்!

சென்னை, நவ. 19—

"பங்கீடு முறையை மக்கள் விரும்பவில்லை; ஆனால் பங்கீடு நீடித்திருந்தால் விலைவாசிகள் உயர்ந்திருக்க முடியாது. இப்போதுள்ள ஒரே வழி, உற்பத்தியைப் பெருக்குவதுதான்; விலைவாசி உயர்வு மிகவும் வெட்கக்கேடான விஷயம்"

என்று, மத்திய அரசாங்க நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

வெறும் பேச்சால் திருப்தி ஏற்படுமா?

சென்னை, நவ. 19—

"என். ஜி. ஓ.-க்களுக்கு தற்போது அளிக்கப்படும் உதவி மிகவும் அற்பத்தனமானது; மேலும் தாராளமாக வழங்குவதற்கு இப்போது நிலைமை அனுமதிக்கவில்லை. சீக்கிரத்தில் நிலைமை அபிவிருத்தியடையும்; அவர்களின் கோரிக்கை தீர்க்கப்படும்"

என்று நிதி அமைச்சர் டி. டி. கே. தெரிவித்தார்.

ஜெர்மன் நிபுணர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை?

புதுடில்லி, நவ. 19—

'சேலம் மாவட்டத்தில் ஒரு உருக்கு ஆலை ஏற்படுத்தும் விஷயமாக கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்த நிபுணர்கள் தங்கள் அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை' என்று உற்பத்தி அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்தார்.

'சுதேசி'க்கு சர்டிபிகேட்!

புதுடில்லி, நவ. 17—

'வெளிநாடுகளிலிருந்து பிளேடுகள் இறக்குமதி செய்வதைத் தடை செய்யவேண்டும்' என்று கேட்கப்பட்டபோது அண்மையில் மத்திய அமைச்சராகப் பதவி ஏற்ற மொரார்ஜி தேசாய், 'தினமும் நான் என் முகத்தை வெட்டிக் கொள்ள விரும்பவில்லை; 'சுதேசி' பிளேடுகள் ஒரு முறைக்குமேல் பயன்படுவதில்லை' என்று மக்கள் சபையில் பதிலளித்துள்ளார்.

சென்னையின் புதிய கவர்னர்

ஏ. ஜே. ஜான் நியமனம்

புதுடில்லி, நவ. 19—

சென்னை கவர்னராக திரு. ஏ. ஜே. ஜான் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

இப்போது கவர்னராக உள்ள ஸ்ரீ பிரகாசா பம்பாய் கவர்னராக நியமனம் பெற்றுள்ளது தெரிந்ததே!

திரு-கொச்சி மாநிலத்தில் முதன் மந்திரியாயிருந்த ஏ. ஜே. ஜான், இப்போது சென்னை மாநில கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று 'இராஷ்டிரபதி பவன்' அறிக்கை கூறுகிறது.

டிசம்பர் திங்களில், ஜான் பதவி ஏற்பார் என்று தெரியவருகிறது.

ஏ. ஜே. ஜான், வைக்கம் அருகே உள்ள தலயோல பாரம்ப கிராமத்தைச் சேர்ந்தவர்; முன்னாள் திருவனந்தபுரம் உயர் நீதிமன்றத்தில் பிரபலமான வழக்கறிஞராயிருந்தவர்; திருவாங்கூர் காங்கிரசில் தீவிர உறுப்பினராயும் அதன் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

அவர், டி. கே. நாராயணபிள்ளை மந்திரிசபையில் உறுப்பினராயிருந்தார்; அவர் மந்திரிசபை 1952-ல் வீழ்ந்துவிட்டபோது, ஜான் புதிய மந்திரிசபை ஒன்று அமைத்தார்; 1953 செப்டம்பர் திங்களில் அந்த மந்திரிசபையும் வீழ்ந்துபட்டது; பின்னர் அண்மையில், பனம்பள்ளி-கோவிந்த மேனன் மந்திரிசபையில் ஜான் நிதி மந்திரியாயிருந்தார்.

புதிய கவர்னர் ஜான், டிசம்பர் திங்கள் துவக்கத்தில் பதவி ஏற்பார் என்று தெரியவருகிறது.

ஈராக் தலைநகரில் ஆர்ப்பாட்டங்கள்

பாகிஸ்தானுக்கு எதிராக ஒலி முழக்கம்

பலர் கொல்லப்பட்டனராம்

பாக்தாத் ஒப்பந்தத்திற்கு எதிராகவும், பாகிஸ்தான் சர்க்காருக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுமார் 5 000 மக்கள் கொண்ட கூட்டத்தோடு போலீசார் மோதிக் கொண்டதின் விளைவாக, எண்மர் கொல்லப்பட்டனர் என்றும், பலர் படுகாயப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவங்கள் பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மீர்சா, பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி ஆகிய இருவரும் பாக்தாத் வந்தபோது நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

பாக்தாத் ஒப்பந்தம் கிழித்தெறியப்படவேண்டும் என்றும், அராபிய நாடுகள் அனைத்தும் எகிப்தின் பக்கம் நின்று ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினராம்.

தையல் நூல் ஏற்றுமதிக்கு மேலும் இலட்சம் ராத்தல் ஒதுக்கப்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

நம் நாடு

தி.மு.கழக இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20-11-'56 செவ்வாய்

காமன்வெல்த் உறவு ஏன்?

கற்றுக்கொள்ள வேண்டிய சில அவசியமான பாடங்களை மக்களின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வைப்பது, வாழ்க்கையில் அவ்வப்போது தலை தூக்கிக் கசப்பான அனுபவங்களைச் சுமத்திவிட்டுச் செல்லும், இன்பத்தின் உடன் பிறப்பான துன்பந்தான்!

இரண்டாம் உலகப் போரின் கொடிய விளைவுகளை—கசப்பான அனுபவங்களை—எல்லையற்ற துன்பங்களை மறந்துவிட இன்றும் முயற்சித்துக்கொண்டிருக்கும் மனித குலம், அந்தப் பயங்கரப் போரின் இறுதியில்தான் மகத்தான பாடங்களை கற்றுக்கொண்டது. அவற்றில் ஒன்றுதான், 'இனி உலகில் போர் என்ற சொல் இல்லாது ஒழியவேண்டும்,' என்பது!

இந்த இனிய எண்ணம் ஈடேற்றப்படுவதற்கு ஒரு உலகப் பொது நிறுவனம் தேவை என்பதையும் போரின் இறுதிக் காட்சிகள் வலியுறுத்தத் தவறவில்லை. உலக மக்களின், 'இனி யுத்தம் கூடாது,' என்ற கருத்தும், கடந்த போரின் பயங்கரப் படுநாசங்களும் பிறப்பித்த கட்டளைதான் இன்றைய ஐ. நா.

ஐ. நா. தோற்றுவிக்கப்பட்டபோது பிரகடனப்படுத்தப்பட்ட இலட்சியங்கள் அப்பழுக்கற்றவை, புனிதமானவை என்றாலும், 'அந்த ஐ. நா., உலக மக்களின் நியாயமான விருப்பத்திற்கு ஒப்பப் பணியாற்றவில்லை, கடந்த பத்து ஆண்டுகளில்' என்ற குறைபாடு இன்று உணரப்படுகிறது. ஆனால், இந்தக் குறைபாடு காரணமாகவே, ஐ. நா-வின் தலைமையில் உலக மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று கூறமுடியாது.

ஐ. நா. பல்வேறு இடையூறுகளுக்கிடையேயும், கடந்த காலத்தில் குறிப்பிடத் தகுந்த பணியாற்றியிருக்கிறது என்பதிலும் சந்தேகமே இல்லை.

வல்லரசுகள் என்ற பெயருடைய நாடுகள் ஐ. நா.-வினைத் தங்களது நிரந்தர ஆதிக்கத்திற்கு உட்படுத்திவிடலாம் என்று கண்ட கனவுகள், தகர்த்தெறியப்பட்டு வருகின்றன. ஐ. நா.-வில் இடம் பெற்றுள்ள நாடுகள் அனைத்தும், சம அந்தஸ்தும் உரிமையும் பெற்றனவாக விளங்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்துவருகிறது.

உலகில் தோன்றக்கூடிய அபாயகரமான பிரச்சினைகளுக்குச் சுமூகமான பரிகாரம் தேடுவதில் ஐ. நா. வெற்றிபெற முடியவில்லை. 'ஆற்றலற்றிருக்கிறது' என்று கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கும், எகிப்து மீது பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தடுத்து நிறுத்தியதின் மூலம் ஐ. நா. சபை தக்க பதிலளித்திருக்கிறது.

ஒன்றை மனதில் கொண்டாகவேண்டும்;—ஐ. நா.-வின் பலம் என்பது, அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் அளிக்கும் பலம்தான்; ஐ. நா.-வின் நடவடிக்கைகள் வெற்றி பெறுவது, சாசனத்தில் கையொப்பமிட்ட நாடுகள், அதன் வாசகங்களுக்கு விசுவாசம் செலுத்துவதைப் பொறுத்தது என்பதை எல்லோரும் உணர்ந்தாக வேண்டும்.

ஐ. நா., உலக மக்கள் அனைவருக்குமான ஒரு பொது நிறுவனமாக நிரந்தரமாகப் பணிபுரிய என்றென்றும் வெற்றியோடு திகழ, முதலில், நம்மால் குறிப்பிட்டுக் கூறக்கூடிய குறைபாடுகள் சில அகன்றாக வேண்டும்.

உலகில் விடுதலை பெற்றுள்ள அத்தனை நாடுகளும் ஐ. நா.-வில் இடம் பெறும் போதுதான், ஐ. நா. உலக மக்கள் அனைவரின் பிரதிநிதித்துவமும் உடையதாக விளங்க முடியும். மேலும், அங்கம் பெறும் நாடுகள் அனைத்தும் தாங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தின் நற்பயன்களை உலகில் உள்ள சகல மக்களும் அனுபவிக்க ஐ. நா. துணை புரிவதற்கு, தங்களிடையே உள்ள கருத்துவேற்றுமைகள், விருப்பு வெறுப்புகள் தடையாக நில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

60 கோடி மக்களைக் கொண்ட செஞ்சீன ஐ. நா.-வில் இல்லை. தோற்றோடிப் போய் பெரும் வல்லரசு ஒன்றின் துணையால் பார்மோசாவில் உயிர் வாழும் சியாங்கின் கும்பலுக்கு, ஐ. நா.-வில் மட்டுமின்றி, பாதுகாப்புச் சபையிலும் இடம் தரப்பட்டிருப்பது, சுதந்திர நாடுகள் பலவற்றிற்கு—மேற்கில் உள்ளவைதான்—இன்னும் வெட்கத்தை தரவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

ஒரு நாட்டின் சுதந்திரம், விடுதலை மதிக்கப்படாமலிருக்கும் கொடுமையை நீடிக்கச் செய்பவர்கள், ஐ. நா.-வில் அமர்ந்திருப்பது, வெட்கக் கேடானதாயில்லையா?

'ஐ. நா.பலம் பொருந்தியதாக, உலக மக்களின் விருப்பத்திற்கொப்பப் பணி புரிவதாக இல்லை' என்று குறைபடுவோர், இந்தக் குறைபாடுகளைக் கண்ணுற்றாக வேண்டும்.

குறைபாடுகள் இருப்பினும், நம்பிக்கையூட்டத்தக்க வகையில் எகிப்து விவகாரத்தில் பாரபட்சமின்றி, ஐ. நா. சபை துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. உலக மக்கள் மேலும் ஐ. நா.-வின் தலைமையில் தங்களுக்குள்ள நம்பிக்கையைப் பெருக்கிக்கொள்ள இது உதவுவதாகும்.

மேலும், உலகில் நிரந்தரமான சமாதானம் நிலவச் செய்யவும் மக்களுக்கு விடுதலையோடு கூடிய நல்வாழ்வு அளிக்கவுமான உயரிய இலட்சியத்திற்குத் தொடர்ந்து ஐ. நா. பணியாற்றவேண்டுமானால் 'இந்த இலட்சியத்திற்குப் பாடுபடுவதே தாங்கள் பிறப்பெடுத்ததின் நோக்கம்,' எனப் பீத்தித்திரியும் வல்லரசுகள், ஐ. நா.வில் கோஷ்டி சேர்ப்பதை, தங்களிடமுள்ள பண-படை பலங்களால் சின்னஞ்சிறு நாடுகளை மிரட்டுவதின் மூலம் 'தயைபுரிவீர் தயாபரரே!' என்று அவை தங்கள் காலடி பணிந்து கெஞ்ச வேண்டும் என்று எதிர்பார்க்கிற இழிநிலைப்பை விட்டுவிட வேண்டும். அதேபோல, சின்னஞ்சிறு சுதந்திர நாடுகளும் தங்கள் மனச்சாட்சியை விற்றுவிட்டு, நெடியகாலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை எண்ணிப்பாராமல் வல்லரசு கோஷ்டிகளின் 'எடுப்பார் கைப்பிள்ளை'களாக விளங்குவதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

மேலும், ஐ. நா. சபை என்று ஒரு உலகப் பொது நிறுவனம் இருக்கும்போது அதற்குப் புறம்பான அமைப்புகளை வல்லரசுகள் உருவாக்கி வைத்துக் கொண்டுள்ளன. இவை எல்லாம், நிரந்தரமான சமாதானம் தேடுவதற்கு ஐ. நா.-வின் பாதையில் தடைக்கற்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன என்றாலும் அது மிகையாகாது.

உலகத்தில், தாங்களே தோற்றுவிக்கிற பயங்கரமான பிரச்சினைகளுக்கு வல்லரசுகள், ஐ. நா.-வுக்கு வெளியே பரிகாரம் தேட நினைப்பதும், அந்த முயற்சிக்குப் பல சுதந்திர நாடுகள் தலையசைப்பதும் கண்டிக்கத்தக்கனவாகும்.

காமன்வெல்த், நாட்டோ, சீட்டோ, பாக்தாத், வார்சா ஒப்பந்தங்கள் போன்ற—ஐ. நா.-வுக்குப் புறம்பான அமைப்புகள், ஐ. நா.-வின் பலக் குறைவுக்குக் காரணமானவை என்பதுமட்டுமல்ல; உலக நெருக்கடிகளுக்கும் காரணமானவையாகும். ஐ. நா. சபையை கேலிக்குரியதாக ஆக்குகின்றன, அந்த அமைப்புகள் இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லப்படுகிற வாதங்கள்!

இதுபோன்ற புறம்பான இராணுவக் கூட்டுகள், அமைப்புகள் ஒழிவதின் மூலமும்தான் ஐ. நா. மேலும் பலம் பொருந்தியதாக விளங்கவும், அந்தப் பலத்தின் மூலம் வெற்றிகரமாகப் பணியாற்றுவதும் முடியும்.

இந்த அமைப்புகள் அனைத்தும் கலைக்கப்பட்டாக வேண்டும். இன்றைய நெருக்கடிகள், இதனை வலியுறுத்துகின்றன.

காமன்வெல்த் கலைக்கப்படுவது, பிரிட்டனின் விருப்பத்தைப் பொறுத்தது; ஆனால், 'ஐ. நா.-வுக்குப் புறம்பான காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டும்.'—இது, இன்று இந்தியாவில் உள்ள எல்லா விழிப்புப்பெற்ற மக்களது கோரிக்கையாகும். காங்கிரசில் உள்ள ஆச்சாரியார் இந்தக் குரலை எதிரொலித்திருக்கிறார்; ஆனால், பண்டித நேரு....? காங்கிரசாரிடையே, 'ஆச்சாரியார் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது' என்ற எண்ணம் தோன்றினாலும், அவர்களது குழப்பம் நீங்கக் காணோம்.

காங்கிரசல்லாத கட்சிகள் அனைத்தும், 'காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டும்' என்று வற்புறுத்துகின்றன, பல காரணங்களைக் காட்டி!

நமது தி. மு. கழகம் தோன்றிய நாளிலிருந்து, இந்த அமைப்பின் உள்நோக்கத்தை அம்பலமாக்கி, டில்லியின் தவறினைச் சுட்டிக்காட்டி, 'காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டும்' என்று கோரிவந்துள்ளது.

இக்குரல், கடந்த கிழமை இறுதியில் சென்னை கடற்கரையில் சர்வ கட்சியினர் வாயிலாகவும் ஒலித்திருக்கிறது.

தோழர் எச். டி. இராசா எம்.பி. அவர்களின் சீரிய முயற்சி, இந்த காமன்வெல்த் எதிர்ப்பினைப் பொறுத்து, பொதுவாகத் தமிழரதும், குறிப்பாக நம்முடையவும் பாராட்டுக்கு உரியதாகும்.

'இந்தியா காமன்வெல்த்திலிருந்து விலகவேண்டும்' என்று ஸ்தாபன ரீதியாக சென்னைக் கடற்கரையில் எழுந்துள்ள குரல், இமயத்தில் எதிரொலிக்க வேண்டும். அதற்குத் தொடர்ந்து பலரும் பணியாற்ற வேண்டும்.

'மாஸ்கோ கைப்பொம்மைகளாகக் கூடாது'

'சுதந்திரமாகச் செயல்பட முனைய வேண்டும்'

இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அறிவுரை

புதுடில்லி, நவ. 19—

"மாஸ்கோவின் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டதாக இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள் அறிவித்துவிட்டு, 'சோஷலிச' இலட்சிய வெற்றிக்கென தங்கள் சொந்த வழிகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

"தாங்கள் எப்போதுமே சுதந்திரமாகத்தான் இருந்துவருவதாகக் கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறிவருகிறார்கள். உண்மையிலேயே இவ்விஷயம் பரிதாபப்படத்தக்க ஒன்றுதான். ஏனென்றால் தாங்கள் கூறுவது அனைத்தும் உண்மையல்ல என்பதும், தாங்கள் கூறுவதை இங்கு யாரும் நம்பப்போவதில்லை என்பதும் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்,"

என்று, பி சோ கட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆங்கில வார இதழ் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், 'இந்த நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகள் எல்லாம், இதர நாடுகளிலுள்ளதுபோல் மாஸ்கோவின் 'கைப்பொம்மை'களாகச் செயல்பட்டதின் விளைவாகத் தங்களைத் தாங்களே கேலிக்கூத்துக்கு ஆளாக்கிக் கொண்டுள்ளனர்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்போதிருக்கிற பிரச்சினை எல்லாம், 'மாஸ்கோ தாசர்கள்' என்ற நிலையிலிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுகள் விடுபட்டு, தங்களுக்குச் சொந்தமான சோஷலிசப் பாதையை உருவாக்குவதற்குப் போதுமான உணர்ச்சிகொண்டிருக்கிறார்களா என்பதுதான்.

"போலந்து, ஹங்கேரியில் இருந்த 'ஸ்டாலின் கைப்பொம்மைகள்'கூட, தாங்கள் சுதந்திரமாகவே இருப்பதாகத்தான் கூறினர்; என்றாலும், அங்குள்ள மக்கள் அவர்கள் கூற்றைப் பொய்யாக்கிவிட்டனர். எனவே, இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகளும், வெறும் வாய்ப்பேச்சுக்களால் எந்தவிதப் பலனும் இல்லை என்ற உண்மையை உணர்ந்தாக வேண்டும்—உணரும் கட்டமும் வந்துவிட்டது. அப்படி உணர்ந்து சுதந்திரமாகச் செயல்படுவதின்மூலம், இந்திய மக்களின் மனதையும் கம்யூனிஸ்டுகள் மாற்றியாக வேண்டும்; அதற்கு கால அவகாசம் தேவையாயிருக்கும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர், இதுவரையிலும் ரஷ்யாவை தவறே இழைக்காத ஒரு இலட்சியபூமி எனக் கம்யூனிஸ்டுகள் கருதி வந்துள்ளனர் என்றும், இப்போது அந்த எண்ணம் சிதைந்துவிட்டதென்றும், இனி மேலும் அங்கு எதுவுமே நடக்காததுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தால் அறிவுள்ள மக்கள் அவர்களை மதிக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து ரஷ்யாவின் நடவடிக்கைகளிலிருந்து தாங்கள் எப்படி வேறுபடுகின்றனர் என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

'ஒரு கட்சி ஆதிக்கம் ஒழிய வேண்டும்'

அசோக் மேதா அறைகூவல்

புதுடில்லி, நவ. 17—

புதுடில்லியில் நடைபெற்ற பி சோ. கட்சியின் மாநாட்டில் பேசுகையில், அசோக் மேதா, "எதிர்காலத்தில் இந்த நாட்டை ஒரு தனிப்பட்ட கட்சியின் ஆதிக்கத்தில் விடுவது மிகவும் ஆபத்தானது; இதை மக்கள் உணரும்படி செய்யவேண்டியது எல்லா அரசியல் கட்சிகளின் கடமையாகும்" என்று எச்சரித்துள்ளார்.

'டீசல்' இயந்திர தயாரிப்புத் தொழிற்சாலை

விசாகையில் நிறுவப்படுமாம்

ஐதராபாத்; நவ. 17—

டீசல் இயந்திரத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை விசாகப் பட்டினத்தில் நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் யோசித்து வருவதாக மத்திய உற்பத்தி அமைச்சர் ரெட்டி தெரிவித்துள்ளார்.

பல்கேரிய முன்னாள் பிரதமர் கைது?

பெல்கிரேட், நவ. 18—

பல்கேரியாவில் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் பலர் கைது செய்யப்படுவதாகவும் அதனை ஒட்டி முன்னாள் பிரதமரும், விவசாயக் கட்சித் தலைவருமான கான்ஸ்டான்டின் முராவீவ் என்பாரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

சோபியாவிலிருந்து கிடைத்துள்ள இந்தத் தகவல்கள் கிரேக்க கத்தோலிக்க பாதிரியார் ஒருவரும் சில ஜனநாயகக் கட்சி அரசியல்வாதிகளும், சில மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றனவாம்.

1944-ல் சில காலம் பல்கேரிய பிரதமராயிருந்த முராவீவ், ஜெர்மானியருடன் சண்டையிட்டுக் கொண்டு, ரஷ்யருடன் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டவர் என்றும் தெரியவருகிறது.

இந்தியா—பாகிஸ்தான் எல்லை வரையறுப்பு

ரூ. 8,35,000 இந்தியாவிற்குச் செலவாகுமாம்

புதுடில்லி, நவ. 14—

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எல்லை வரையறை செய்வதற்கு சுமார் ரூ. 8,35,000 இந்திய அரசாங்கத்திற்குச் செலவாகும்" என்று பாராளுமன்றத்தில் அயல் நாட்டு அமைச்சர் சந்தா அறிவித்துள்ளார்.

வர்த்தகர்களுக்கு உதவ வேலை நேரம் அதிகரிப்பு

சென்னை, நவ. 15—

வரும் டிசம்பர் முதல் பெரிய கூட்ஸ் ஷெட்டுகளில், காலை 8-மணி முதல் இரவு 12 மணி வரை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு அதிக வசதி அளிப்பதற்காகவும், வாகனங்கள் சீக்கிரம் திரும்புவதற்காகவும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரூ. 85 கோடி செலவில்!

ஆந்திராவில் அணைத் திட்டம் : சில விவரங்கள்

ஆந்திர சர்க்காரின் முயற்சியின் கீழ் வேலை துவக்கப்பட்டுள்ள நாகார்ஜுனசாகர் அணைத் திட்டத்துக்கு (முதல் கட்டம்) மொத்தம் சுமார் ரூ. 85 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நாகார்ஜுனகொண்டாவில், கிருஷ்ணா நதிக்குக் குறுக்கே கட்டுமான அணையொன்றை அமைப்பது, முதல் கட்டத்தில் அடங்கியுள்ள வேலையாகும்.

இந்த அணை, தண்ணீர் பாய்ந்தோடும் இடங்களில், அஸ்திவாரத்திலிருந்து 302 அடி உயரமும், இதர இடங்களில் 342 அடி உயரமும் உள்ளதாக இருக்கும்.

இந்த அணையின் மூலம் மொத்தம் 54 இலட்சம் கன அடி தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வகையேற்படும்.

அணைத் திட்டத்தின் மூலம் மொத்தம் 21 இலட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

ரூ. 5 கோடி செலவில்!

சிறு கைத்தொழில் பண்ணைகள் ஆரம்பிக்கப்படுமாம்

கிராமத் தொழில்களை ஊக்குவிக்கத் திட்டமாம்

புதுடில்லி, நவ. 11—

கிராமப்புறங்களில் சிறிய கைத்தொழில்களின் அபிவிருத்தியை வளர்ப்பதற்காக சமுதாய நலத்திட்டப் பிரதேசங்களில் சிறு தொழில் துறைப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்று டில்லி ஆட்சியினரால் ஏற்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சமுதாய அபிவிருத்தித் திட்டத் தொகுதிகளில் 620-க்கு மேற்பட்ட மாதிரி கிராமங்கள் அமைக்கப்படும்; இந்த இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ. 2 இலட்சம் முதல் ரூ 5 இலட்சம் வரை செலவாகக்கூடிய சிறு தொழில் துறைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும்

மின்சாரமும் இதர வசதிகளும் கிடைக்கக்கூடிய மாதிரி கிராமங்களில் இச்சிறிய பண்ணைகள் தொடங்கப்படும்.

ஏற்கனவே 15-க்கு மேற்பட்ட சிறு தொழில் பண்ணைகளில் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்துக்கு ரூ 5 கோடிக்கு மேல் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சிமெண்டு உற்பத்தி

15 புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படுமாம்

புதுடில்லி, நவ. 15—

ஆண்டுக்கு 37,85,500 டன் வீதம் அதிகப்படியாக சிமெண்டு உற்பத்தி செய்யக்கூடிய 21 திட்டங்களை இந்திய அரசாங்கம் ஏற்றுள்ளது.

அவைகளில் 15 திட்டங்கள் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும், 6 திட்டங்கள் ஏற்கனவேயுள்ள தொழிற்சாலைகளைப் பரவலாக்குவதாகவும் உள்ளன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், 1961-ல் உற்பத்தி சக்தி 160 இலட்சம் டன்னுக மதிப்பிடப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் புதிய தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும். சென்னைக்கு விஸ்தரிப்புத் திட்டம் உள்ளது.

வாத்து வேட்டை உயிரைப் பறித்தது

புதுடில்லி, நவ. 17—

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பிலாய் எஃகு ஆலைத் திட்ட ரஷ்யக் குழுவின் பிரதம எஞ்சினியர், வாத்து வேட்டையாடுகையில், ஏரியில் மூழ்கி மாண்டாராம்.

நீங்கள் வாக்காளர் ஆகிவிட்டீர்களா?

'நீங்கள் வாக்காளர் ஆகிவிட்டீர்களா? வாக்காளர் ஆகாவிட்டால் உடனே வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்,' என்று முன்பு நமது இதழில் பலமுறை வெளிவந்த செய்தி, தோழர்களுக்கு நினைவிருக்கலாம்.

வாக்காளர் ஆகுவது எப்படி? வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவாகாதிருந்தால் மேற்கொண்டு செய்யவேண்டியது என்ன?—இது போன்ற ஐயப்பாட்டிற்குச் சரியான விளக்கம் இல்லாததினால், 21 வயது நிரம்பிய அனேகத் தோழர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இன்னமும் பதிவு செய்யாமல் இருப்பதாக நம் கவனத்திற்கு வருகிறது. வாக்காளர் ஆவதற்கு அரசாங்கம் விதித்திருந்த காலம் முடிவடைந்துவிட்டது. இனி வாக்காளராக மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

உங்கள் கிராமம், அல்லது நகரத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில், 21 வயதிற்கு மேற்பட்டவர்களது பெயர் பதிவு செய்யாமல் விடுபட்டிருந்தால் உடனடியாக அந்தக் கிராமம், அல்லது நகரத்திலுள்ள தாலுகா ஆபீசுக்குச் சென்று, வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்கு வேண்டிய பாரம் (நமூனா-IV) பெற்றுக்கொள்ளுங்கள். இது இலவசமாக விநியோகிக்கப்படுவதாகும்.

மேற்படி பாரத்தைப் பூர்த்தி செய்துகொண்டு அத்துடன் ரூ. 1-க்கு முத்திரை பத்திரம் (Non-judicial Stamp Paper) வாங்கி, அதில் குடியிருப்பு சம்பந்தமாய்! வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவு பெற விட்டுப் போனதாகத் தெரியவருவதால் தன்னைப் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்பதாகத் தாசில்தார் அவர்களுக்கு மனு எழுதி, முன்பு பூர்த்தி செய்திருக்கும் நமூனா-IV யும் ஒன்றாகச் சேர்த்து தபாலிலோ, நேரிலோ தாசில்தாரிடம் சேர்த்துவிடவும். பின்னர் விசாரணை செய்து வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைச் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அவர்களே (தாசில்தார்) கவனித்துக்கொள்வார்கள்.

நீங்கள் மனுச் செய்த 15 தினத்திற்குள் எவ்விதத் தகவலும் இல்லையானால், மீண்டும் தாசில்தார் அவர்களுக்கு இது பற்றி சாதாரணத் தபால் மூலம் நினைவுபடுத்தலாம். தேர்தல் தேதி அறிவிப்புவரை மேற்கண்டவிதத்தில் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

'ஜனநாயகம் பிழைக்க எதிர்க் கட்சி வேண்டும்'

காங்கிரசல்லாத கட்சிகள் ஒற்றுமை குறித்து ஜெயப்பிரகாஷ்

"ஆளும் கட்சியோ அல்லது மற்ற எந்த ஒரு கட்சியோ எவ்வளவு நல்ல கட்சியாக அது இருந்தபோதிலும், அதற்கு எதிர்க் கட்சி இல்லை என்று சொன்னால், அந்தக் கட்சி சீரழிவது நிச்சயம்.

"ஜனநாயக அரசியல் நடைபெற, ஆளும் கட்சி எத்தனை தான் நல்லதாயிருந்தாலும், அதற்குச் சரியானதோர் எதிர்க் கட்சி இருந்தாக வேண்டும்; இன்றேல் ஜனநாயகம் வெற்றி பெறாது.

"இந்தியாவில் இன்று, காங்கிரசைப் போன்ற பலம் வாய்ந்த கட்சிகள் இல்லைதான்; ஆனால், காங்கிரசுக்கு எதிராக எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு, இப்போதுள்ள காங்கிரசல்லாத கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, தங்களுக்கிடையே, காங்கிரசை ஒருமுகத்தில் எதிர்ப்பதற்கான தேர்தல் ஏற்பாடு ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்,"

என்றும், ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியிருக்கிறார்.

அணு ஆயுதச் சோதனை

மாஸ்கோ, நவ. 18—

ரஷ்யா இதுவரையில் 12 அணு ஆயுத பரிசோதனைகளை நடத்தியுள்ளது.

நேற்றும் ஒரு சோதனை நடத்தியதாம்; மிகுந்த உயரத்தில் இந்தச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

****

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே வீறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
5 11—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

****

பர்மா தி. மு. கழகத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

"கடந்த 14—10—56 அன்று பர்மா தி. மு. கழகப் பணிமனையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், இவ்வாண்டு டிசம்பர் இறுதிக்குள் கழக ஆண்டு விழாவும் தேர்தலும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர் கட்டண நிலுவைகளை வசூல் செய்ய உறுப்பினர் கட்டண வசூல் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, இக்குழுவினர் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று கட்டண நிலுவைகளை தேர்தலுக்குள் வசூலிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. எனவே, கழக நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவும், கழகத் தேர்தலில் அனைவரும் கலந்துகொள்ளவுமாகத் தோழர்கள் அனைவரும் உடனே தங்கள் உறுப்பினர் கட்டண நிலுவைகளை, கழகத்தில் நேரடியாக வந்தோ, தங்கள் பகுதி பொதுக் குழு உறுப்பினர்களிடமோ, சம்பந்தப்பட்ட வசூல் குழுவினரிடமோ குறிப்பிட்ட கால அளவிற்குள் செலுத்திவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். கழகத்தில் நேரடியாக வந்து செலுத்தப்படும் தொகைகள் தினமும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்,"

என்று, பர்மா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வி. சுப்பிரமணி அறிவித்துக்கொண்டுள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா?

★

2,000 அடி நீளமுள்ள இரயில்வே பிளாட்பாரங்கள்

இரண்டாயிரம் அடிக்குமேல் நீளமுள்ள இரயில்வே பிளாட்பாரங்கள் உலகத்திலேயே மொத்தம் எழுதான் உள்ளன. இவற்றில் ஐந்து பிளாட்பாரங்கள் இந்தியாவில் இருக்கின்றன. உலகத்திலுள்ள நீளமான பிளாட்பாரங்களில் இரண்டாவதும், மூன்றாவதும் இந்தியாவில், முறையே வடகிழக்கு இரயில்வேயில் சோனேப்பூரிலும், தென்கிழக்கு இரயில்வேயில் கரக்பூரிலும் உள்ளன.

இந்தியாவுக்கு மூன்றாவது இடம்!

புகையிலை உற்பத்தியில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக, உலகத்தில் மூன்றாவது இடத்தை இந்தியா வகிக்கிறது. ஆண்டுதோறும் மொத்தம் 55,55,00,000 பவுண்டு புகையிலை இங்கு உற்பத்தியாகிறது.

உலக 'ஹாக்கி' விளையாட்டில் இந்தியா முதலிடம் வகிக்கிறது!

ஆம்ஸ்டர்டாமில் 1928-ம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் ஆட்டப் போட்டிகளில், இந்திய ஆட்டக் குழுவினர் முதன் முதலில் கலந்துகொண்டதிலிருந்து இதுவரையில் ஹாக்கிப் பந்து விளையாட்டில், இந்தியாவே முதல் இடத்தைத் தொடர்ந்து வகித்து வந்திருக்கிறது.

நெல் உற்பத்தி உயர்வு

இந்தியாவில் ஜப்பானிய நெல் சாகுபடி முறையே மேற்கொண்ட பிறகு 1953—54-ம் ஆண்டிலிருந்து இதுவரையில் நெல் உற்பத்தி உயர்ந்து வந்திருக்கிறது. இதன் மூலம் 1953—54-ம் ஆண்டில் 1,31,395 டன்னும்; 1954—55-ல் 4,96 400 டன்னும்; 1955—56-ல் 8,28,190 டனனும் அதிகமாக நெல் உற்பத்தியாகி இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு வர்த்தகக் கழகம்

தேர்தலில் ஈடுபட நடவடிக்கை

தமிழ் நாடு வர்த்தகக் கழகமும் அடுத்து நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ள இருக்கிறது வரும் டிசம்பர் மூன்றாவது வாரத்தில் நடக்கவிருக்கும் அக்கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில், அபேட்சகர்களின் இறுதிப் பட்டியல் தெரிவிக்கப்படும்.

சட்டசபைத் தேர்தலுக்கு அக்கழகச் சார்பில் நிற்க இருக்கும் அபேட்சகர்கள் நிலைபற்றிக் கண்டறிய, திரு. வி. வி. இராமசாமி எம். எல். சி., சேவலால் காளிதாஸ் சேட், கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரடங்கிய குழு தஞ்சை, செங்கற்பட்டு மாவட்டங்களில் பல இடங்களுக்குச் சென்று பரிசீலனை செய்துவந்ததாகவும், மீண்டும் வருகிற 28-ந் தேதியிலிருந்து வேலூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கும் இது சம்பந்தமாகச் சுற்றுப்பயணம் செய்ய இருப்பதாகவும் தெரிகிறது. (ந. கி.)

எஞ்சினியரிங் துறையில் அனுபவப் பயிற்சி

உபகாரச் சம்பளங்கள் வழங்க சுவீடன் முன்வருகிறது

தொழில் நுட்ப அனுபவம் பெறுவதற்காக, இயந்திர நுட்ப எஞ்சினியரிங் துறையில் (கணக்குப் பதிவு இயந்திரங்கள், கணக்குப் போடும் இயந்திரங்கள் ஆகியவற்றின் உற்பத்தி பற்றியது) இந்தியர் இருவருக்கு 9 மாத கால அனுபவப் பயிற்சி அளிப்பதற்கான உபகாரச் சம்பளங்களை வழங்க சுவீடன் முன்வந்திருக்கிறது.

இவர்களுக்கு மாதமொன்றுக்கு 500 - 550 குரோனர்கள் (சுமார் ரூ. 450 - 500) உபகாரச் சம்பளமாக அளிக்கப்படும்.

காமன்வெல்த் உறவால் என்ன இலாபம்?

சுதேச மன்னர்களை ஒழித்துவரும் சர்க்கார்

இராணியைத் தலைவியாக ஏற்றுக் கொள்வதேன்?

சென்னைக்கூட்டத்தில் சர்வகட்சித் தலைவர்கள் முழக்கம்

சென்னை, நவ. 20—

18—11—56 மாலை, காமன்வெல்த் எதிர்ப்புக் கழகத்தின் சார்பில், சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில், சர்வகட்சித் தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் கீழே தரப்படுகிறது :—

எச். டி. இராசா

"காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டும் என்பதற்கு நாம் கூறுகிற காரணம், எகிப்தில் பிரிட்டன் அநியாயமாக நடந்துகொண்ட அக்கிரமப் போக்கு மட்டுமல்ல; உலகமெங்கிலுமுள்ள கருப்பு மனிதர்களை இந்த வெள்ளையர்கள் அடக்கி ஆண்டு அவர்களைச் சுரண்டி தாங்கள் சந்தோஷமாக வாழ்கின்றனர் என்பதனால்தான்! மற்றவர்களைக் கொள்ளையடித்து பிரிட்டன் உயர் வாழ்க்கை வாழும் இந்தச் சூழ்நிலையில் அதனுடன் நமக்குத் தொடர்பு ஏன்?

"உண்மையிலேயே பிரிட்டிஷ்காரன் ஒரு சூழ்ச்சிக்காரன் உழைத்துப் பாடுபட்டு சுதந்திரம் பெற்ற பின்னும்கூட இந்த நாட்டை தந்திரமாகச் சுரண்டுகிறான். சுயராஜ்யம் கிடைத்துவிட்டதாக இந்தக் காங்கிரசார் கூறிக்கொள்கிறார்களே — இன்னும் இந்த நாட்டில் பொருளாதார அடிமைத்தனம் போய்விட்டதா? உண்மையாகவே சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கூறிக்கொள்ளும் எந்த ஒரு நாட்டிலும் இப்படி பொருளாதார அடிமைத்தனம் இருக்கவே இராது.

"இந்தியா காமன்வெல்த்திலிருந்து வெளியேற வேண்டுமென்று ஆச்சாரியார் கூறியிருக்கிறார். அப்படி அவர் உண்மையிலேயே கூறுவாரானால் அவர் காங்கிரசைவிட்டு வெளியேறி குரல் எழுப்ப வேண்டும்."

ஏ. சுப்பிரமணியம்

"காமன்வெல்த்தில் இந்தியா இன்னும் உறவுகொண்டிருப்பது இந்த நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாகும். வெள்ளையருக்கும் நமக்கும் விரோதம் ஒன்றுமில்லை. அவர்கள் நமது நண்பர்களே; அவர்களை நமது சகோதரப் பிரஜைகளாகவே பாவிக்கிறோம். ஆனாலும், இந்தப் பிரச்சினை வேறு. அரசியல் துறையில் வெளிநாடுகளுடன் கொள்ளும் தொடர்பு வேறு பிரச்சினை என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். எந்தந்த நாடுகளுடன் எந்தந்த தொடர்பு கொள்ளவேண்டும் என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

"நாம் காமன்வெல்த் அமைப்பை தார்மீக அடிப்படையில், இந்த நாட்டின் பண்பாடு, பரம்பரையின் பேரால் எதிர்க்கிறோம். நமது நாடு தன்மானமுள்ள நாடு—நாம் தன்மான உணர்ச்சிகொண்டவர்கள் என்ற முறையில் அந்த அமைப்பிலிருந்து வெளியேற வேண்டும்."

ஆர். இராமநாதன்

'இந்தியாவின் உறவு தனக்கு இல்லையென்றால் தன் கௌரவம் மிக மோசமாகிவிடும் என்ற உண்மை பிரிட்டனுக்குத் தெரிந்தே இருக்கிறது; எனவேதான், தனது ஏகாதிபத்தியப் பிடிப்பை, காமன்வெல்த் என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலம் தந்திரமாக இந்தியாவையும் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டிலிருந்து இந்தியா விலகியே ஆகவேண்டும்; அதனுடைய உறவு நமக்குத் தேவையே இல்லை."

காஞ்சி - கல்யாணசுந்தரம் :

"காமன்வெல்த் கூட்டில் இந்தியா இருப்பது மிக அக்கிரமமான செயல் என்று தி. மு. கழகம் கருதுகிறது. எகிப்தில் பிரிட்டன் தனது ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டுகிறது என்ற ஒன்றை மட்டும் வைத்து கழகம், காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலகவேண்டும் என்று கூறவில்லை.

"ஒரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கைக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் உள்நாட்டின் நிலையை வெளிநாட்டில் பிரதிபலிக்க முடியும்; வெளிநாட்டிலுள்ள தனது நிலையை உள்நாட்டில் பிரதிபலிக்க முடியும்.

"ஏற்கனவே இரத்தக் கறை படிந்த இந்தியா, மேலும் தனது கையைக் களங்கப்படுத்திக் கொள்ளாமலிருக்க உடனே காமன்வெல்த்திலிருந்து வெளியேறியாக வேண்டும். காமன்வெல்த்தில் இருப்பதால் எந்தவித இலாபமும் இல்லை. அக்கூட்டில் இருந்தால் பிரிட்டனின் உதவி கிடைக்குமே என்று கூறுகிறார்கள், காங்கிரசார்! அப்படியானால், காமன்வெல்த்தில் இல்லாத மற்ற நாடுகளுக்கெல்லாம் பிரிட்டனின் உதவி கிடைக்கவில்லையா?

"எனவே, இந்தியா காமன்வெல்த்தை விட்டு வெளியேற வேண்டுமென்பதுதான் நமது நோக்கமாகும். அது தத்துவப்படி சரியாகவோ தவறாகவோ இருக்கட்டும், தார்மீக நியதிப்படி அது நியாயமேயாகும்."

கே. அருணாசலம் :

"சுதந்திரம் கிடைத்தபின் இந்த நாட்டில் மன்னர்கள் ஆட்சி இருக்கக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில், இங்கிருந்த 560 - சமஸ்தானங்களை ஒழித்து, அவர்களுடைய ஆதிக்கத்தையும் ஒழித்தனர்; பின்னால் ஒன்றிரண்டு பேராக இருந்த இராஜப் பிரமுகர்களாக இருந்தவர்களையும் ஒழித்துவிட்டுக் கவர்னராக்கினர். இந்தக் கவர்னர்களும் இன்னும் 5 வருடங்களுக்குப் பின்னர் சாதாரணக் குடிமக்களாகிவிடுவர். இப்படி மன்னர் ஆட்சியை ஒழிக்கும் கொள்கைகொண்ட இந்த சர்க்கார் —மன்னர்கள் வேண்டாமென்று கூறும் இந்த சர்க்கார், இராணியைத் தலைவியாகக்கொண்ட பிரிட்டனின் தலைமையில் உள்ள காமன்வெல்த்தில் கூட்டுச் சேர—எப்படி இணைந்திருக்கச் சம்மதித்தார்கள்?'

எஸ். விஜயலட்சுமி

'ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு ஆதிக்கம் செலுத்துகிறதென்றால், அந்த ஆதிக்கம் அமெரிக்க ஆதிக்கமாகவோ, பிரிட்டன் ஆதிக்கமாகவோ, ரஷ்ய ஆதிக்கமாகவோ எதுவாக இருந்தாலும் நாம் ஒழித்தே ஆகவேண்டும்.

"நமக்குக் காமன்வெல்த் உறவு தேவையில்லை. ஆனால் உலக மக்கள் என்ற நட்புறவுடன் நாம் எப்போதும் எல்லா மக்களுடனும் இருப்போம்; ஆனால் ஒரு தனிப்பட்ட நாட்டின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம். அந்த அடிப்படையில் காமன்வெல்த்திலிருந்து இந்தியாவை விலகச் செய்வதற்காக எந்த சக்தி முன்வந்தாலும் அதனுடன் பி. சோ. கட்சி பரிபூரணமாக ஒத்துழைக்கும்."

காங்கிரசை முறியடித்தாக வேண்டும்

இடதுசாரி இளைஞர் முன்னணிக் கூட்டத்தில் எச். டி. இராசா பேச்சு

சென்னை, நவ. 19—

17—11—56 மாலை 6½ மணியளவில், சென்னை—வண்ணையம்பதி கல்லறை மைதானத்தில், சென்னை இடதுசாரி முன்னணியின் சார்பில், தோழர் திருநாவுக்கரசு தலைமையில் ஒரு சர்வகட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எச். டி. இராசா, ஆர். இராமநாதன், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர், 'பொதுத் தேர்தலும் எதிர்க் கட்சிகளின் கடமையும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

தோழர் எச் டி. இராசா தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

'உத்தமர் காந்தியார் பெயரைச் சொல்லி பாமர மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து ஓட் வாங்கி ஆட்சியிலிருப்பதுதான் காங்கிரஸ் சர்க்கார்; அந்த சர்க்காரை முறியடிக்க எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து, ஏதாவது ஒரு திட்டத்தில் இணைந்து தேர்தலில் போட்டியிடவேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில், எதிர்க்கட்சியில் ஒரு கட்சியோ மற்றொரு கட்சியோ உருவவேண்டும்.

'ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தேவையான அளவு பணம் இந்த நாட்டின் நலனுக்காக ஒதுக்கப்படவில்லை. தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் பறிபோனது கண்டு நாமெல்லாம் போராடினோம்; மொழிவழி அடிப்படையில் அப்பகுதிகள் நமக்குக்கிடைக்கவேண்டும் என்பதற்காகப் போராடினோம். ஆனாலும் டில்லி சர்க்கார் நம் கோரிக்கையை மறுத்துவிட்டது. இங்குள்ள நமது அமைச்சர்களோ எதுவும் செய்வதற்குச் சக்தியற்றவர்களாகிவிட்டனர். இந்த நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு கோரிக்கை எழுப்பினோம்; அதையும் நிராகரித்துவிட்டது. இப்படி தமிழனுக்கு டில்லியிலே எந்தவிதமான மதிப்பும் இல்லை என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டுவிட்டோம். இந்த அவமானங்களையெல்லாம் நீக்க, தமிழர்களாகிய நாமெல்லாம் கட்சி பேதங்களை மறந்து காங்கிரசை தேர்தலில் முறியடித்தாக வேண்டும். அந்த மகத்தான பணிக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாகக்கொண்டு உதவி செய்யவேண்டும். அந்தப் பணிக்கு பொதுமக்களும் ஆதரவு தரவேண்டும்."

ஒரே மாதிரி விலையில்!

உப்பும், நிலக்கரியும் கிடைக்க யோசிக்கிறார்களாம்

கூடுமானவரையில் நிலக்கரியும் உப்பும் இந்தியா முழுவதிலும் ஒரே மாதிரி விலையில் கிடைக்கச் செய்வதற்கு யோசித்து வருவதாக உற்பத்தி இலாகா உதவி அமைச்சர் மக்கள் சபையில் அறிவித்தனர்.

சென்னை மாவட்ட தி.மு.க.-மாணவர் கிளை

ஆலோசனைக் கூட்ட அழைப்பு

"24—11—56 காலை 9-மணியளவில், சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், சென்னை மாவட்ட தி. மு. க.-மாணவர் கிளைக் கூட்டம் நடைபெறும். மாணவர் கிளை பற்றிய எதிர்கால வளர்ச்சி குறித்தும், வெளிவர இருக்கும் அண்ணா அவர்களின் 'Homeland' இதழுக்கு மாணவர் ஆதரவு குறித்தும் ஆலோசிக்கப்படும்.

"ஆகவே, சென்னை நகரிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்கள், மாணவர் கிளை நிர்வாகிகள், மற்றும் கழக ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கோள்கிறேன்"

என்று, தி. மு. க மாநில மாணவர் கிளை அமைப்பாளர் தோழர் டி. கே பொன்னுவேலு அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை 47-வதுவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

22—11—56 இரவு 7-மணியளவில், கழக இல்லத்தில், மேற்படி கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

'நான் போற்றும் தலைவர்'—பேச்சுப் போட்டி

22—11—56 மாலை 4-மணிக்கு, வடசென்னை பொழுது போக்கு சங்கத்தின் இலக்கிய கலாச்சாரக் கிளையின் சார்பில், சங்கத்திற்கு எதிரேயுள்ள சுந்தரமூர்த்தி செட்டியார் பள்ளியில் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கான பேச்சுப் போட்டிகள், 'நான் போற்றும் தலைவர்' எனும் தலைப்பில் நடைபெறும். வெற்றி பெறுவோருக்கு முறையே மூன்று பரிசுகள் வழங்கப்படும். திரு கே. அருணாசலம், தமிழ்வாணன், திருமதி ஏ. ஆர். இந்திரா ஆகியோர் நீதிபதிகளாக இருப்பர்.

சிந்தனையாளர் கழக ஆண்டு விழா

22—11—56 மாலை 6-மணிக்கு, சின்ன காஞ்சிபுரம் சிந்தனையாளர் கழக ஆண்டுவிழா, அம்மங்காரத் தெருவில், தோழர் இ எத்துராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, இரா. வெங்கடேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

21—11—56 மாலை 6-மணிக்கு. சென்னை—சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக மனையில், தோழர் கன்னையன் தலைமையில் நடைபெறும்; 'இன்றைய உலகமும் நாமும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணை

தூத்துக்குடி, நவ. 17—

தூத்துக்குடி கே வி. கே. சாமி கொலை வழக்கின் இரண்டாவது நாள் விசாரணை இன்று சப்-மாஜிஸ்திரேட் பட்டாபிராமன் முன்னிலையில் நடைபெற்றது.

வழக்கறிஞர் பி. எஸ் கந்தய்யா பிள்ளை, தங்கப்பழம், செகன்னாதன் சார்பில், நேற்று சாட்சி கூறிய நடராசனை குறுக்கு விசாரணை செய்தார்.

தனக்கு கே வி கே. சாமியை 7, 8 ஆண்டுகளாகத் தெரியும் என்றும், சாமி தொழிலாளர் தலைவர் என்றும், பல கௌரவமுள்ள பதவிகளை வகித்தவர் என்றும், கிராம முன்சிப் ஆறுமுகத்தை தனக்குத் தெரியாது என்றும், எதிரிகளில் யாருடனும் அவருக்கு சண்டை பூசல்கள் எதும் இல்லை என்றும், உப்புத் தொழிலாளர்களுக்குப் போட்டி சங்கம் இருப்பதாகவும், அதற்கு கம்யூனிஸ்டான ஐசாக் தலைவர் என்பது உண்மையல்ல என்றும் நடராசன் கூறினார்.

மேலும், கொலை சம்பவத்தைக் குறித்து, சாமி கொலை செய்யப்பட்ட வடக்கு காட்டன் சாலை மக்கள் நடமாட்டம் சொற்பமாக உள்ள பகுதி என்றும், எதிரிகள் எல்லோரும் ஒன்றாக ஓடிவந்தனர் என்றும், முகமூடிகள் எதும் அவர்கள் அணிந்துகொண்டு வரவில்லை என்றும், பொதுக் குழாய் அருகே தான் முதல் தாக்குதல் நடந்ததென்றும், சாமி தெற்கு நோக்கி ஓடியபோது காத்தாடியை பார்த்ததாகவும், எதிரிகள் எல்லோரும் சூழ்ந்துகொண்டு சாமியை தாக்கினர் என்றும், எதிரிகள் சாமியை தாக்கும்போது வசைமாரி பொழிந்தனர் என்றும், தான் சாமியின் நண்பரான சாம் மாசிலாமணி வீட்டிற்குச் சென்று அவரது உதவியைப் பெற ஓடியதாகவும், மீண்டும் திரும்பி வந்தபோது சாமி கொலையுண்ட இடத்தில் ஒருவரையும் காணோம் என்றும், வந்த 5 நிமிடங்களுக்குள் போலீஸ் வந்துவிட்டது என்றும், இரவு 10-30 மணிக்கு வாக்குமூலம் மட்டும் அளித்ததாகவும் குறிப்பிட்டார்.

எதிரி பெருமாள் நாடார் சார்பாக வழக்கறிஞர் பாலாஜி, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது, சாமி ஓய்வின்றி வேலை செய்பவர் என்றும், சாமியைக் காப்பாற்றுவதற்காகவே சாம் மாசிலாமணி வீட்டுக்கு ஓடியதாகவும், தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளது யாருடைய தூண்டுதலின் பேரிலும் அல்ல என்றும் நடராசன் பதிலளித்தார்.

எதிரிகளான சந்தியாகு, பொன்னுசாமி தேவர் சார்பில் வழக்கறிஞர் குமர குருபரன், 4-வது எதிரியான பெருமாள் சார்பில் வழக்கறிஞர் மிராண்டா, 9-வது எதிரி பாண்டியத் தேவர் சார்பில் வழக்கறிஞர் வைரவன், 10-வது எதிரியான ஜெகன்னாதன் சார்பில் கந்தய்யா ஆகியோர் நடராசனை குறுக்கு விசாரணை செய்ததோடு, இன்றைய விசாரணை முடிவுற்றது.

அணுசக்தி கதிரியக்கம்

பண்டித நேரு தகவல்

புதுடில்லி, நவ. 19—

செப்டம்பர் 17-ந் தேதியன்று கல்கத்தாவில் பெய்த மழையில் அணு சக்திக் கதிரியக்கம் அதிகமாய் இருந்ததை கல்கத்தா சர்வகலாசாலையினர் கண்டுபிடித்துள்ளனர் என்று பண்டித நேரு மக்கள் சபையில் அறிவித்தார்.

உண்மையை ஒப்புகின்றனர்!

சென்னை, நவ. 19—

"நேரு இல்லையேல் காங்கிரஸ் இல்லை; நேரு இல்லாத காங்கிரஸ் பூர்ணத்துவம் பெற்றதாக இருக்காது; இரண்டும் தேகமும் ஆத்மாவும்போல! இரண்டையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாது. நாங்கள் அனைவரும் நேருவின் கையாட்கள்"

என்று, மத்திய அரசாங்க நிதி அமைச்சர் டி. டி. கே காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.